# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 16600/A/2024

திரு. ஆ.சேட்டு -- மனுதாரர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
வாலாஜா கிழக்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம். -- பொது அதிகார அமைப்பு

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. ஆ.சேட்டு அவர்கள் ஆஜரானார் |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.TMS.லதா<br>பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், வாலாஜா கிழக்கு ஒன்றியம், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 18.09.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், வாலாஜா (கிழக்கு) ஒன்றியத்தில் உள்ள அனைத்து வகை அரசு மற்றும் நிதி உதவி தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளின் ஜனவரி-2024 முதல் ஆகஸ்ட் 2024 வரை 8 மாதங்களுக்குரிய அந்தந்த பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிய பள்ளிகளின் மாதாந்திர அறிக்கையின் நகல்களை தனக்கு தகவல்களாக வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | 10.10.2024 |

| | |
|---|---|
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 28.10.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | 05.11.2024 |
| பிரிவு 18(1) -ன் கீழான புகார் மனு நாள் | 20.12.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி.TMS.லதா, பொதுத் தகவல் அலுவலர் / கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், வாலாஜா கிழக்கு ஒன்றியம், இராணிப்பேட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு 401/அ2/2024, 10.10.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக பொதுத் தகவல் அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அதன் நகல் மற்றும் அஞ்சலக இணையதள அனுப்புகை சீட்டின் நகல் ஆகியவற்றை சமர்ப்பித்தார்.

3. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான மனுதாரர், தனக்கு தகவல் தற்போது தேவைப்படவில்லை என்று தெரிவித்து, உரிய தகவல் வழங்காமல், தவறான தகவல் வழங்கிய பொதுத்தகவல் அலுவலர் மீது தகவல் அறியும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 20(1) மற்றும் 20(2)-ன்படி அபராதமும், துறை ரீதியான நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைக்குமாறு ஆணையத்தைக் கோரினார்

4, இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்து, மனுதாரர் தற்போது தகவல்கள் தேவையில்லை என்று தெரிவித்ததன் அடிப்படையில் பின்வருமாறு உத்தரவிடப்படுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் சரியான தகவல் அளிக்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோரின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 12.08.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் மற்றும் அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் ஆகியோருக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 16600/A/2024</u>**

**பெறுநர்**

**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர் /
கண்காணிப்பாளர்,
வட்டாரக் கல்வி அலுவலகம்,
வாலாஜா கிழக்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம் - 632 513.

<u>**மனுதாரர்**</u>

திரு. ஆ.சேட்டு
14, பள்ளிக்கூடத் தெரு,
அம்மூர்,
வாலாஜா தாலுகா,
ராணிப்பேட்டை - 632 501.

Copy to file

KRM/PA 15.07.2026